செ.வெ.எண்:643 நாள்:16.09.2016

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தங்கும் விடுதிகள், பணிபுரியும் பெண்கள் விடுதிகள் மற்றும் விடுதிகள் அனைத்தும் உடனடியாக பதிவு செய்ய விண்ணப்பிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தங்கும் விடுதிகள், பணிபுரியும் பெண்கள் விடுதிகள் மற்றும் விடுதிகள் அனைத்தும் ஒருவார காலத்திற்குள் பதிவு செய்ய நாகர்கோவில், பழைய அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடத்தில் செயல்படும் மாவட்ட சமூகநல அலுவலரிடம் விண்ணப்பத்தினை பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறும், கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட சமூகநல அலுவலகத்தை (தொலைபேசி எண்:04652-278404) தொடர்பு கொள்ளலாம் எனவும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.